405

ஜ ஆரி ம் 1௨




புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.

வருட சந்தா ரூ. 2-0-0.

# பொருளடக்கம்.


திருப்புகழ்

| | | | |
|---|---|---|---|
| சீரான | 49 | சென்னிமலைச் சிறப்பு | 64 |
| கந்தரலங்காரம் | | கற்பு | 67 |
| மலையாறு | 61 | | |

(கந்தரநுபூதி பின்னர் வரும்)


---

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதார நல்விழா.

அவதார நாள் சுபாநு௵ ஆனி௴ 3உ

17-6-43 வியாழக்கிழமை

1. காங்கேயநல்லூரில். ஸ்ரீமான் மலையதாஸ் பாகவதர் அவர்களால் முருகர் கோயிலில், கொண்டாடப்பெறும்.

2. மோகனூர். (கரூர் சமீபமுள்ளது.) காந்தமலையாண்டவன் சன்னிதானத்தில் கீழ்கண்டபடி கொண்டாடப்பெறும்.

வைகாசி 26உ முதல் ஆனி 2உ வரை லக்ஷார்ச்சனை.

ஆனி 3உ வியாழக்கிழமை.

| | | |
|---|---|---|
| காலை 8 மணிக்கு | | காவிரியிலிருந்து பாற்குடம் எடுத்தல் |
| 10 | ,, | அபிஷேகம் |
| 12 | ,, | [illegible]ரித்தல் |
| மாலை 4 | ,, | பிரம்மஸ்ரீ வித்வான் கி. வா. ஜகந்நாதையரவர்கள் சொற்பொழிவு. |
| இரவு 7 | ,, | ஆண்டவன் புஷ்பப் பல்லக்கில் திருவீதி பவனியுடன், |

திருவாவடுதுறை அகில இந்திய நாதஸ்வர வேணுகான சக்ரவர்த்தி T. N. ராஜரத்தினம் பிள்ளையவர்கள் நாகஸ்வரம், நீடாமங்கலம் அபிநவ நந்திகேசுவரர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் தவுல், இவர்கள் கச்சேரியும், தஞ்சாவூர் ராஜாமணி பொய்க் குதிரைநாட்டியமும் நடைபெறும்.

ஆனி௴ 4உ. (18 6 43) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இசையரசு தேவாரமணி M. M. தண்டபாணி தேசிகர் இன்னிசை யரங்கும், இரவு 9 மணிக்கு திருமுருக. கிருபானந்தவாரி அவர்கள் சொற்பொழிவும் நடைபெறும். ஒலி பெருக்குங் கருவியும் அமைக்கப் படும். (அன்பர்கள் திரளாகச்சென்று சேவித்து இன்புறுமாறு வேண்டப் படுகின்றனர்)

3. வயலூரில் தாராநல்லூர், திரு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் திரு. அ. வேலுபிள்ளையவர்கள், நாச்சிகுறிச்சி திரு. துரைசாமி நாடார் அவர்கள் முதலியோர்களால் கொண்டாடப்பெறும்.

4. மதுரை, திருநெல்வேலி திருப்புகழ் சபையார்களாலும் கொண்டாடப்பெறும்.

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

| மலர் 8 Vol 8 | சுபாநு ஆனி மீ 1 உ ஜூன் 1943 | இதழ். 3. No 3. |
|---|---|---|

## திருப்புகழ்

### விராலிமலை.

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்

சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்

ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்

ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா

கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே

கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.

பதவுரை.

ஏர் ஆரும்-அழகு நிறைந்த, மாட கூட மதுரையில் மீது-மாட கூடங்களுடன் கூடிய மதுரையம்பதிகண், ஏறி மாறி ஆடும் இறையவர் - வெள்ளியம்பலத்திலேறி கால்மாறியாடிய கண்ணுதற்கடவுள், ஏழ் எழு பேர்கள் - நாற்பத்தொன்பது சங்கப்புலவர்கள், கூற வரு பொருள் அதிகாரம்-உரைவகுத்துக் கூறுமாறு அருளிய பொருளதிகாரத்தின், ஈடு ஆய - அவ்வுரைகளுள் சிறந்ததனை ஆய்ந்துரைக்கும் பொருட்டு, ஊமர் போல வணிகர் இல் ஊடாடி - ஊமைப்பிள்ளையைப்போல் உருத்திர ஜன்மர் என்ற திருநாமத்துடன் செட்டி வீட்டில் தோன்றி விளையாடி, விதி செய்த லீலா - உரைகளின் தாரதம்மியத்தைப் பகுத்து வெளியிட்ட திருவிளையாடலைச் செய்தவரே! தீர-தைரியத்தை யுடையவரே! வரதர-வரத்தையருள்பவரே! குருநாதா-உலகங்களுக்கெல்லாம் குருமூர்த்தியாக விளங்குபவரே! முன் வீய நினைபவன்-முன்னாளில் தான் கூறியபடி "சயத்ரதனைப் பொழுது போவதற்குள் கொல்லா தொழியின் இறந்துபட்டொழிவேன்" என்று எண்ணிய அருச்சுனன், ஈடேறு மாறு-இறவாது உய்வு பெறும் பொருட்டு, கூர் ஆழியால் பானு மறைவு செய்-கூர்மை பொருந்திய சக்கரப்படைக்கலத்தால் சூரியனை மறைத்தருளிய, கோபாலராயன்-யதுகுலத்தலைவராகிய கண்ணபிரானுடைய, நேயம் உள்ள திரு மருகோனே - அன்புடைய திருமருகரே! கோடாமல் ஆரவார அலை எறி - எக்காலத்தும் குறைவின்றி ஆரவாரத்துடன் அலைகளை வீசிப்பெருக்கெடுத்து ஓடுகின்ற, காவேரி ஆறு பாயும் வயலியில்-காவேரி நதி பாய்ந்து வளஞ்செய்கின்ற வயலூர் என்னும் புண்ணியதலத்திலும், கோனாடு சூழ் - கோனாடு என்னும் திருநாடு சூழப்பெற்ற, விராலி மலை - விராலி [illegible]வும், உறைபெருமாளே - வாழ்கின்ற பெருமையின் [illegible] சிறப்பு வாய்ந்ததும், கோல

கால – கோலாகலத்துடன் கூடியதும், நவமணி மாலா – ஒன்பது மணிகளின் வரிசையிலை பொலிவதும்ஆகிய, அபிஷேகபார- திருமுடிகளைத்தாங்கி விளங்குவதும், வெகு வித தேவ – அநேக வகைப்பட்ட அமரர்களும், அதிதேவர் தேவர்களின் தலைவர்களும், சேவை செயும் – சேவித்து வணங்கும், மலர் முகம் ஆறும்–தாமரை மலர் போன்ற ஆறு திரு முகங்களையும், சீர் ஆடு வீர மாது மருவிய – பெருமை நிறைந்த வீர இலக்குமி தழுவிவாழ்கின்ற, ஈராறு தோளும் – பன்னிரு புயாசலங்களையும், நீளும் வரி அளி – நீண்ட வரிகளுடன் கூடிய வண்டுகள், சீ ராகம் ஓது – ஸ்ரீராகம் என்னும் பண்ணைப்பாடி மொய்த்திருக்கின்ற, நீப பரிமள – கடப்ப மலர் மணமிகுந்த, இருதாளும் – இரண்டு திருவடிகளையும், ஆராத காதல் வேடர் மட மகள் – தணியாத காதலுடன் கூடிய வேடர் குலக்கொழுந்தாகிய வள்ளியம்மையாரும், ஜீமூதம் ஊர் – மேகத்தின் மீது ஏறுபவனும், வல அரி – வலன் என்ற நிருதனை வதைத்தவனுமாகிய இந்திரனுடைய. மட மகள் – மடம் என்னும் குணம் பொருந்திய தெய்வயானையம்மையாரும், ஆதார பூதம் ஆக – உலகங்கட்கு ஆதார சத்திகளாக, வலம் இடம் உறை வாழ்வும் – முறையே வலப்புறமும் இடப்புறமுமாக வாழ்கின்ற வாழ்வையும், ஆராயும் நீதி வேலும் – நீதியை ஆராய்கின்ற ஞானமேயாகிய வேலாயுதத்தையும், மயிலும் – மயில் வாகனத்தையும், மெய் – சத்து, ஞானம் – சித்து, அபிராம தாபம் – அழகின் மிகுதி (அதனை விளைவது ஆனந்தம்) வடிவமும் – சச்சிதானந்தத் திருவுருவத்தையும், ஆபாத னேனும் – கொடியேனாகிய அடியேனும், நாளும் நினைவது பெற வேணும் – இடையறாது நினைக்கும் தன்மையைப் பெற்று உய்ய வேண்டும்.

## பொழிப்புரை.

அழகு நிறைந்த மாடகூடங்களுடன் கூடிய மதுரையம்பதியிலே, வெள்ளியம்பலத்தில் நின்று கால்மாறியாடிய கண்ணுதற் கடவுள் கூறியருளிய இறையனாரகப் பொருள் என்னும் நூலுக்கு நாற்பத்தொன்பது சங்கப் புலவர்களும் பொருள்கூறி தத்தம் உரையே பெரிதெனக் கலாம் விளைக்க, அதிற் சிறந்த வுரையை ஆராய்ந்து சொல்ல ஊமைப்பிள்ளையைப்போல வணிகர் வீட்டில்

தோன்றி (உருத்திரஜன்மர் என்ற திருநாமத்துடன் விளங்கி) கலாந்தீர்ந்து முறை செய்த திருவிளையாடலைச் செய்தவரே! ஆராய்ச்சியை யுடையவரே! தீரரே! தீப் புகுந்து இறக்க நினைக்கும் அருச்சுனன் உய்வுபெறும் பொருட்டு கூரிய சக்கரப்படையால் கதிரவனை மறைத் தருளிய கோபால மணிவண்ணனுக்கு அன்புமிக்க திரு மருகரே! குறையாமல் எப்பொழுதும் ஆரவாரத்துடன் அலைகளை வீசும் காவிரிநதிபாயும் வயலூரிலும், கோனாடு சூழ்கின்ற விராலிமலையிலும் எழுந்தருளியுள்ள பெருமித முடையவரே! சிறப்பு வாய்ந்து கோலாகலத்துடன் கூடிய நவமணிகளை வரிசையாகப் பதித்த மணிமகுடங்களைத் தாங்கி விளங்குவதும், தேவர்களாலும் தேவதேவர் களாலும் சேவைசெய்வதும் ஆகிய மலர்போன்ற ஆறு திருமுகங்களையும், பெருமை பொருந்திய வீரமகள் வாழும் பன்னிரு திருப்புயங்களையும், நீண்ட வரிகளுடன் கூடிய வண்டுகள் இருந்து ஸ்ரீராகம் என்னும் பண்பாடும் கடப்பமலர்களால் மணங் கமழ்கின்ற இரு திருவடிகளையும், தணியாத காதலுடைய வள்ளியம்மையாரும் மேகவாகனனும் இந்திரனுடைய புதல்வியாராகிய தேவகுஞ்சரியாரும் வலப்புறமும் இடப் புறமுமாக எழுந்தருளியுள்ள வாழ்வையும், நீதியை ஆராய்கின்ற ஞானமாகிய வேலாயுதத்தையும், மயில்வாக னத்தையும், சச்சிதானந்த வடிவத்தையும் கொடியே னாகிய அடியேன் எப்பொழுதும் மறவாமல் நினைந்து உய்யவேண்டும்.

## விரிவுரை.

சீரான........முகமாறும்:—

கோலாகலம் என்பது கோலகாலமென சந்தத்தைக் குறித்து மாறி வந்தது. கோலாகலம் - சம்பிரமம்.

அபிஷேகம் - முடி.

உரகர்பதி அபிஷேக மாயிரமும் —வகுப்பு.

தேவாதிதேவர் - தேவ அதிதேவர். முப்பத்துமுக் கோடி தேவர்களும், அவர்களுக்குத் தலைவர்களாகிய மூவர்களும் பணியநின்ற முழுமுதற்கடவுள் முருகவேள்.

"இதழ்பொதிய விழ்ந்த தாமரையின்
மணவறை புகுந்த நான்முகனும்
எறிதிரை யலம்பு பாலுததி நஞ்சராமேல்
இருவிழி துயின்ற நாரணனும்
உமைமருவு சந்த்ர சேகரனும்
இமையவர் வணங்கு வாசவனும் நின்றுதாழும்
முதல்வ" —திருப்புகழ்.

சீராடு வீர மாது மருவிய ஈராறுதோளும்:—

சூராதி யவுணர்களை யழித்து வாகைமாலை சூடியது எம்பிரானுடையதோள். வீரமடந்தைக்கு வேறு எங்கும் தங்குதற்கு இடமின்றி குமரன் தோள்களிற் குடிபுகுந்தனள்.

"அலகிலவுணரைக் கொன்ற தோளென"

அளவிலா அவுணரை யழித்து உலகங்கட்கு வாழ்வு தந்தது அத்தோளே யாகலின், கச்சியப்பர் வாழ்த்துச் சொல்லவந்தபோது முதலில் தோளை வாழ்த்தினர்.

ஆறிரு தடந்தோள்வாழ்க.

நீளும் வரியளி சீராக மோதும் நீபம்:—

நீபம் - கடப்பமலர். வண்டுகள் மலரிலுள்ள தேனை யுண்டு ஸ்ரீராகம் என்னும் இராகத்தைப் பாடுகின்றது. மேலும் புயவகுப்பில், வண்டுகள் இராகமாலிகை பாடுகின்றன என்பார்.

வகைவகை குழுமி மொகுமொகு மொகென அநேகச
முகராக மதுபம் விழச்சிறு
சண்பகஞ் செறிந்த தாரிற்பொலிந்தன.

இத் திருப்புகழை ஸ்ரீராகத்தில் பாடுவது மரபு; மிக்க இன்பத்தை விளைவிக்கும்.

**ஆராத காதல் வேடர் மடமகள்:—**

ஆராத - தணியாத. முருகவேளுக்கு வள்ளிநாயகியாரிடம் தணியாத காதல் என்பது அவரை உய்விக்கும் பொருட்டு எழுந்த தயவைக் குறிக்கும்.

> "பணியாவென வள்ளிபதம் பணியும்
> தணியா அதிமோக தயாபரனே"
> —அநுபூதி.

மட மகள் - மடமைக்குணம் பொருந்தியவர். மடம் என்பதற்கு அறியாமை என்று பொருள் கொள்வர்; அது பொருந்தாது. பெண்களுடைய நாற்குணங்களில் ஒன்று மடம். அது அறியாமையாயின் மகளிருக்கு அறியாமை ஒரு குணமாக அமையலாமா?

பின்னர், மடம் என்பதற்கு கொளுத்தியது விடாமை என்பது பொருள். தாய் தந்தை, கணவன் ஆகியோர்களால் நல்லறிவு பெறக் கூறிக் கொளுத்தியது விடாமை எனப்படும்.

**ஆராயு நீதி வேலும்:—**

வேல் என்பது ஞானம். ஞானமே நீதியை ஆராய வல்லது. "அறத்தை நிலைகாணும்" என்றார் வேல்வகுப்பிலும்.

**மெய்ஞ்ஞானபி ராமதாப வடிவம்:—**

மெய் - உண்மை; ஞானம் - அறிவு; அபிராமம் - அழகு; அழகினால் விளைவது ஆனந்தம். காரியத்தைக் காரணமாகப் பேசப்பட்டது. இறைவன் சச்சிதானந்த சொரூபன்.

**நாளும் நினைவது பெறவேணும்:—**

இறைவனை யடைவதற்குச் சிறந்தவழி, அப்பரமபிதாவை இடைவிடாது நினைப்பதுவே.

> "நினையே தினம் நினைக்கவுந் தருவாய்"
> —திருப்புகழ்.

> "நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்"
> —அப்பர்.

மாறியாடும் இறையவர்:—

மதுரையில் அரசுபுரிந்த விக்கிரம பாண்டியனுடைய புதல்வன் இராஜசேகர பாண்டியன் இனிது அறநெறி வழுவாது அரசாண்டனன். அவன் 63 கலைகளையும் உணர்ந்திருந்தனன். சோழநாட்டிலிருந்து வந்த ஒருவன், தனது மன்னன் கரிகால்வளவன் 64 கலைகளிலும் வல்லவன் என்றனன். அது கேட்ட பாண்டியன் தான் உணராதிருந்த 64-வது கலையாகிய பரதசாத்திரத்தைத் தக்காரைக்கொண்டு பழகினான்.

அப்போது தனக்கு ஏற்பட்ட கால்வலியை நோக்கி, "சிறிது நேரம் நாம் நடிப்பதற்கே கால்வலிக்கின்றதே? நடராஜமூர்த்தி அனவரதம் ஓவாது நடிக்கின்றனரே? அவருக்கும் திருவடி வருந்துமே? தாண்டவத்தை நிறுத்தச் சொன்னால் உலகம் நடைபெறாதழியும். ஆதலின் கால் மாறியாடுமாறு பெருமானை வேண்டிக்கொள்வோம்" என்று எண்ணி, திருவாலயம் போய், வெள்ளியம்பலத்துள் ஆடும் விரிசடைக்கூத்தனைக் கண்டு வணங்கிக் கால்மாறியாட வேண்டினான்.

நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததாள் நிலமீ தூன்றி
இன்று நாங் காணமா றி யாடி என் வருத்தமெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேல் பொன்றுவ லென்னா அன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேற் குப்புற வீழ்வேன் என்னா.

அரசன் வேண்டி உயிர்விடத் தொடங்கலும், பெருமான் வலக்காலைத்தூக்கித் திருநடனம்புரிந்தருளினார்.

வான்மாறினும் மொழி மாறாத மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பகமே நின் கருணை யென்மேற்
றான்மாறினும் விட்டு நான்மாறிடேன் பெற்ற தாய்க்கு முலைப்
பான்மாறினும்பிள்ளை பான்மாறுமோ அதிற் பல்விடுமே.

—அருட்பா.

ஏழேழுபேர்கள்.........விதிசெய்தலீலா:—

சங்கப்புலவர் கலகந் தீர்த்தமை.

"தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற மணிவாசகத்தால் புகழப் பெற்ற தென்றமிழ் நாட்டின் தலைநகர் மதுரை. அதன் பெருமை எம்மால் அளக்கற்பாற்றோ?

சிவக்ஷேத்ரோத்தமமிதிஸ்ரீமத் ஹாலாஸ்யமித்யபி!
ஸமஷ்டி வித்யா நகரீ மதுராபுரமித்யபி!
பூலோக சிவலோகஞ்ச ஜீவன்முக்திபுரந்தகா!
சதுஷ்கூடபுரஞ்சேதி த்வாதசாந்தம் விதுர்ப்புதா:!!

என்று அகத்திய சங்கிதையால் புகழப்பெற்று பூலோக கயிலாசம்போல் இன்றும் என்றும் கண்ணுக்குங் கருத்துக்கும் அடங்காத கவினுடன் திகழ்வது மதுரை.

அம்மதுரைமா நகரத்தை வம்சசேகர பாண்டியனது புதல்வன் வம்ச சூடாமணி என்னும் பாண்டியன் அரசு புரிவானாயினன். நாள்தோறும் அம்மன்னர் பெருமான் சண்பகமலர்கள் கொண்டு சோமசுந்தரப் பெருமானை யருச்சிக்கும் நியமம்பூண்டிருந்தனன்; அதனால் அவற்குச் சண்பக பாண்டியன் என்னும் பேரும் போந்தது. அற நெறி வழாது அவன் அரசு புரியுங்கால் கிரகநிலை மாற்றத்தால் மழையின்றி மக்கள் தடுமாற்றமடைந்தனர். பன்னிரு வருடம் பஞ்சத்தால் உலகம் வாடியது. அது காலை ஆங்காங்குள்ள தமிழ்ப்புலவர்கள் பசியால் வருந்தி ஒருங்குகூடி பாண்டியனை யடுத்தனர். பாண்டியன் அவர்களை அன்னைபோல் ஆதரித்துப் போற்றினன்.

பின்னர் மன்னன் அச்சங்கப் புலவர்களை அன்புடன் நோக்கி, "முத்தமிழ்வல்ல உத்தமசீலர்களே! இங்ஙனே எஞ்ஞான்று மிருந்து அமிழ்தினு மினிய தமிழ் நூல்களை யாய்மின்" என்றனன். புலவர் "புரவலரேறே! ஐந்திலக்கணங்களுள் பொருள் நடுநாயகமாக மிளிர்வது, எழுத்தும் சொல்லும் யாப்பும் அணியும் பொருள்மாட்டன்றோ? அப்பொருள் நூலின்றி யாங்கள் எவ்வாறு ஆய்வோம்?" என்று வருந்திக் கூறினார்கள். அரசன் ஆலவாயண்ணல் ஆலயத்தேகி, "தேவதேவா! இக்குறையை தேவரீரே

நீக்கியருளல் வேண்டும்; தமிழும் தமிழ்நாடும் தழைக்கத் தண்ணருள்புரிவீர்" என்று உள்ளம் உருகிக் கண்ணீர் வெள்ளம் பெருக முறையிட்டனன். அன்பர் கருத்தறிந்து அருளும் எம் சொக்கலிங்கப் பெருமான், இறையனார் அகப்பொருள் என்னும் பொருள் நூலையருளிச்செய்து பீடத்தின் கீழ் வைத்தருளினார்.

வடமொழி பாணினியாற் செய்த வியாகரணத்தை யுடைத்து; அப்பாணினியினும் பல்லாயிரமடங்கு மகத்துவ முடையவரும், கரத்தைச்சிறிது கவிழ்த்தலால் விந்தகிரியையும், நிமிர்த்தலால் ஏழ்கடலையும் அடக்கிய பேராற்றலும் பெருந்தவமுமுடையவருமாகிய அகத்திய முனிவரால் செய்யப்பெற்ற இலக்கணமேயன்றி, சிவமூர்த்தியார் செய்தருளிய இலக்கணத்தையும் உடையது இத்தமிழ் எனின் இதன் பெருமையையும் அருமையையும் அளக்கவல்லவர் யாவர்? அதனைத் தாய் மொழியாகக்கொண்ட எமது புண்ணியப்பேற்றைத்தான் அளக்கமுடியுமோ?

அன்பி னைந்திணைக் களவெனப்படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்

என்ற சூத்திர முதலாக அறுபது சூத்திரங்களை யுடையது இறையனார் அகப்பொருள். திருவலகிடச் சென்ற அந்தணர் அதனைக் கண்டு எடுத்தேகி அரசனிடம் அளித்தனர். அவன் அளவற்ற மகிழ்ச்சியை யடைந்து, அதன் பொருள் எளிதில் விளங்காமையின் புலவர்களை நோக்கி "இதற்கு உரை செய்மின்" என்று வேண்டினன். அங்ஙனமே நக்கீரர், கபிலர், பரணர் முதலிய நாற்பத்தொன்பதின்மரும் உரைசெய்தனர். பிறகு அவர்களுக்குள் தங்கள் தங்கள் உரைகளே சிறந்தன என்று கலகம் உண்டாயிற்று. "இவர்கள் உரைகளை யாய்ந்து இதுவே சிறந்தது என்று முடிவு கூறுதற்கு இவரினும் சிறந்த கல்வி கரைகண்ட புலவர் யாண்டுளார்? என் செய்வேன்?

ஆண்டவனே! தேவரீரே இக்கலகத்தை நீக்கியருள்செய்ய வேண்டும்" என்று தென்னவனாகிய மன்னவன் முன்னவன் திருமுன் முறையிட்டனன்.

"வேந்தனே! இவ்வூரிலே உப்பூரிகுடிகிழார் மகனான உருத்திரசன்மனை யழைத்துவந்து உரைகேட்பின் மெய்யுரை அவன் தெரிக்கும். அந்தப்பிள்ளை குமார சுவாமியாகும். மெய்யுரைக்குக் கண்ணீர் சொரிந்து உடல் கம்பித்து ஆனந்த மடைவன்" என்று அசரீரி கூறிற்று. *

அதுகேட்ட புரவலனும் புலவரும் விம்மிதமுற்றுத் திருவருளைப் புகழ்ந்து, வணிகர் திருமனையில் அவதரித்து வளரும் உருத்திரஜன்மரிட மேகினர். அந்தக் குழந்தை, செங்கண்ணன்; புன் மயிரன்; ஐயாட்டைப்பருவத்தன்; மூகைபோல் ஒன்றும் பேசலன்; இத்தகு முழுதுணர்ப் புலவனும் முருகக் குழந்தையை அனைவரும் வணங்கி முறைப்படி அழைத்து வந்து, சங்கப்பலகையிலிருத்தி வாசநீராட்டி வெண்டுகில் வெண்மலர் வெண் சாந்து முதலியவற்றால் அலங்கரித்து, போற்றிசெய்து புலவர் யாவரும் தத்தம் உரைகளை வாசித்தனர். உருத்திரசன்ம ராம் கந்தக் கடவுள் அவ்வுரைகளைக்கேட்டு வருவாராயினார். சிலர் சொல் வைப்பை குறிப்பினால் இகழ்ந்தார்; சிலர் சொல்லழகைப் புகழ்ந்தார்; சிலர் பொருளாழத்தை உவந்தார்; சிலர் பொருளை வெறுத்தார்; கபிலர் பரணர் என்னும் புலவர்கள் வாசிக்கும்போது ஆங்காங்கு மகிழ்ந்து தலையை யசைத்தனர்; மதுரைக் கணக்காயன் மகனார் நக்கீரனார் தம்முரையை வாசித்தபோது ஒவ்வொரு சொற்கடோறும் பொருட்சுவை நோக்கித் தலையசைத்து மெய்புளகித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து இதுவே உண்மை யுரையென விளக்கியருளினர். பாண்டியனும் பாவலரும் மெய்யுரை பெற்றேமென்று களிபேருவகை யுற்றனர்.

நுழைந்தான்பொரு டொறுஞ்சொற்றொறு நுண்மதுஞ்
சுவையுண்டே
தழைந்தானுடல் புலனைந்தினுந் தனித்தான் சிரம் பனித்தான்

---

* அசரீரி கூறியதாக அந்நூலுக்கு உரைகண்ட நக்கீரர் பாயிரத்தில் கூறினர். இனி திருவிளையாடற் புராணத்துள் பெருமான் புலவர்போல் வந்து கூறியதாகவும் தனபதி என்னும் வணிகனுக்கும் குணசாலினிக்கும் மகனாகி வளர்ந்தார் என்றும் கூறும்.

குழைந்தான் விழிவழி வேலையுட் குளித்தான் றனை யளித்தான்
விழைந்தான் புரிதவப் பேற்றினை விளைத்தான் களி திளைத்தான்
—திருவிளையாடற்புராணம்.

இனி, முருகவேள் உருத்திரஜன்மராக வந்தார் என்பது பற்றி சிறிதுகூறுதும். ஓலமறைகளறைகின்ற ஒருவனேவருங்காணாத முழு முதல்வனும் ஆகிய முருகவேள் உருத்திரஜன்மராக வந்தார் என்பது அவருடைய முழு முதற்றன்மைக்கு இழுக்கன்றோவெனின், இழுக்காகாது. முருக சாரூபம் பெற்ற அபரசுப்ரமண்யருள் ஒருவரே முருகவேள் அருள்தாங்கி உருத்திரஜன்மராக அவதரித்தனர். உக்கிரப்பெருவழுதியாகவும், ஞானசம்பந்தராகவும் வந்தமையும் அங்ஙனமே. ஸ்ரீகண்டருத்திரர், வீரபத்திரர், வைரவர், ஆகியோர் செயல்களைப் பரசிவத்தின் செயலாக ஏற்றித் தேவாரதிருவாசகம் கூறுவதனால் பரசிவத்திற்கு இழுக்கில்லையாமாறுபோல், அபரசுப்ரமண்யர்கள் சம்பந்தராகவும் உருத்திரசன்மராகவும், உக்கிரப்பெருவழுதியாகவும் வந்து ஆற்றிய அருஞ்செயல்களை பரசுப்ரமண்யத்தின் செயலாகத் திருப்புகழ் கூறுகின்றது. இதனைக் கூர்த்த மதி கொண்டு நுனிந்து உணர்ந்து ஐயந்தெளிந்து அமைதியுறுக."

"திருத்தகு மதுரைதன்னிற் சிவன்பொரு ணிறுக்கு மாற்றால்
உருத்திர சருமனாகி யுறுபொருள் விரித்தோன்"
—கந்தபுராணம்.

"செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக ருறைவோனே"

"உரைக்கச் செட்டிய னப்பன் முத்தமிழ்
மதித்திட் டுச்செறி நாற்கவிப்புணர்
ஒடுக்கத்துச் செறி வாய்த்தலத்துறை பெருமானே"

"அரியதாதை தானேவ மதுரேசன்
அரிய சாரதாபீட மதனிலேறி யீடேற
அகிலநாலு மாராயு மிளையோனே"

"சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தகருத் ரஜன்மப் பெயர் செப்பியிடப் பரிவாலே

சநகர்க்கு மகஸ்த் யபுலஸ்த் யசநற்.
குமரர்க் குமநுக்ரக மெய்ப் பலகைச்
சதுபத்து நவப் புலவர்க்குர் விபத் தியில்ஞான
படலத் துறுலக் கணலக் யதமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள்வ் ருத்தியினைப்
பழுதற் றுணர்வித் தருள் வித்தகசற் குருநாதா"
—திருப்புகழ்.

கூராழியால்.........கோபாலராயன்:—

அருச்சுனன் தன் மகன் அபிமன்யுவை சயத்ரதன் நீதிக்கு மாறாகப்பொருது கொன்றமையால், சினந்து "நாளை பொழுது சாய்வதற்குள் சயத்ரதனைக் கொல்லேனாயின் தீப்புகுந்து மாள்வேன்" என்று சூளுரை பகர்ந்து, பதினான்காவது நாள் துரியோதனன் சேனையை அழித்தேகுவானாயினன். நெடுந்தொலையில் சயத்ரத னிருந்தமையால் அவனைக் கொல்வது அரிது எனத் தேர்ந்த கண்ணபிரான் ஆழியால் ஆதித்தனை மறைத்தருளினார். தனஞ்சயன் தீப்புக முயலுகையில் சயத்ரதன் அருகிலடைந்தனன். அப்போது கண்ணபிரான் சக்கரத்தை விலக்கி அருச்சுனனைக் கொண்டு சயத்திரதனைக் கொல்வித்து உய்வித்தனர்.

விராலிமலை:—

முருகதலங்களுள் சிறந்தது விராலிமலை. அருணகிரியார் வயலூரில் தங்கியிருந்தபோது, கனவில் பெருமான் தோன்றி நம் விராலிமலைக்கு வருக" என்று அருள்புரிந்தனர். அப்பரைத் திருவாரூருக்கு அரனார் அழைத்தது போல. அருணகிரியார் உடனே எழுந்து விராலிமலைபோய் வழிபட்டனர்.

## கருத்துரை.

சங்கப்புலவர் கலகந்தீர்த்த குருநாதரே! திருமால் மருகரே! விராலிமலை வேலவரே! தேவரீருடைய ஆறுமுகங்களையும் பன்னிரு புயங்களையும், திருவடிகளையும், அம்மையார் இருவரையும் வேலையும் மயிலையும் உண்மை யறிவானந்த உருவையும் இடையறாது அடியேன் நினைந்து உய்வேனாக.

உ

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(51) மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

பதவுரை.

தொலையா வழிக்கு - உலகத்தவரே! (வறிஞர்க்கு வழங்கியது) நீவிர் இறுதியில் செல்லும் தொலையாத வழிக்கு, நும்மை நேடிவரும் - உங்களைத் தேடிக்கொண்டு வருகின்ற, பொதிசோறும் - கட்டமுதும், உற்ற துணையும் கண்டீர் - பொருந்திய உதவியும் ஆகும் என்பதனை உணர்மின்கள்; (ஆதலால்) ஏற்றவர்க்கு - உம்மை வந்து யாசித்தவர்கட்கு. இலையாயினும் - இலைக்கறியையாயினும், வெந்தது ஏதாயினும் - வெந்தது வேறு எதுவாயினும், பகிர்ந்து - பங்கிட்டுக் கொடுத்து, மலை ஆறு கூறு எழ - கிரௌஞ்ச மலையானது வழிகாணப் பிளக்குமாறு, வேல் வாங்கினானை - வேலாயுதத்தை ஏவியருளிய முருகக் கடவுளை, அன்பின் வணங்கி - அன்புடன் பணிந்து, நிலையான மாதவம் செய்குமின் - நிலைபேறுடன் பெருந்தவத்தைச் செய்வீர்களாக.

விரிவுரை.

மலையாறு கூறெழ வேல்வாங்கினான்:—

இலக்கத் தொன்பான் வீரர்களையும் பூதவீரர்களையும் தாரகன் மாயக் கருத்துக் கிணங்கி, கிரௌஞ்சம் என்னும் மலையாயிருந்த அசுரன் தன்னிடத்து மயக்கி இடர் செய்தான். அதுகண்ட முருகப் பெருமான் வேல்வாங்கி அம்மலையைப் பிளந்து அதினின்றும் துணைவரும் வீரரும் வெளிப்பட்டுவர வழியுண்டாக்கி அருள்புரிந்தனர்.

ஆறு - வழி. இனி ஆறு துண்டாகப் பிளந்தனர் என்றும் பொருள் கூறுவர். இந்திராணியின் கழுத்திலுள்ள மங்கல நூல் வாங்கிடாது வளம்பெற முருகன் வேல் வாங்கினான்.

"களிற்றான் கழுத்திற் கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே"

அன்பின் வணங்கி:—

இறைவனை அன்புடன் வணங்குதல் வேண்டும். உலகம் மெச்சுவதற்காகவும், தான் செய்யும் பல தீய செயல்களை மறைப்பதற்காகவும், தன்னைப் புத்தன் என்று உலகம் நம்பி ஏமாந்துபோகும் பொருட்டும், பொய்யாக இறைவனை வணங்குபவரைக் கண்டு இறைவன் சிரிக்கின்றனன்.

எலும்பை விறகாக எரித்து, இறைச்சியை யறுத்து வறுத்து மிக்க பயங்கரமான கொடுந்தவம் அன்பின்றி புரியினும் இறைவனை யடையமுடியாது. அன்போடு உருகி அகங்குழைவோர் எளிதில் அடைவர்.

நிலையான மாதவம்:—

மனிதனை யுயர்த்துவது தவம்; தெய்வத் தன்மையைத் தருவது தவம்; அழிவற்ற ஆற்றலையும் ஆட்சியையும் அருளுவது தவம். அத்தவம் உறுதியுடன் கூடியிருத்தல் வேண்டும். தவத்திற்கு உயிர் உறுதி. இறைவனை நினைந்து தவங்கிடப்போர்க்கு இடையூறுகள் பல உண்டாகும். அவற்றைக் கண்டு அணுவளவும் நிலைகுலையா திருத்தல் வேண்டும்.

தவமேது மின்றி முழுமூட னைகி மயலா லுழன்று தரைமே
லவமே புரிந்து கலரோ டிணங்கி யுடலோம்பி மாளு மடியா
னிவனைகு மென்று மழியா திரங்கி யெனையாண்டு கோடல்கடனே
நவமார் குளந்தை நகரா யரங்கி னடமாடு முக்கண் மணியே
—குளத்தூர் பதிற்றுப்பத் தந்தாதி.

தொலையாவழி..............ஏற்றவர்க்கே:—

தொலையாவழி - கூற்றவனூர்க்குச் செல்லும் மரண யாத்திரை; அது மிகவும் கடுமையான வழி. நெடுந்தூரம் செல்லப்புறப்பட்ட ஒருவன் வழியில் உண்டு இளைப்பாறுதற்குக் கட்டமுது கொண்டுபோவான்; அதற்குத் தோட்கோப்பு என்றும் பேர்.

எமபுரத்திற்கு ஏகும் வழி மிகுந்த துயரத்தை விளைவிக்கும்; பசியுந்தாகமும் வருத்தும்;

"எரிவாய் நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே" —அலங்காரம்.

அத்தகைய கொடிய வழிக்குக் கட்டமுது வேண்டுமல்லவா? அக் கட்டமுது எது? எனின்; ஏழைகள்

வயிற்றில் இடும் அன்னமும் நீருந்தான் அது. வறிஞர்க் கிட்டது வறிதேயாகாது தான் செல்லுந் தனிவழிக்கு நல்ல மதுரமான கட்டமுதாக வந்து உதவி மிகுந்த இன்பத்தைத்தரும்.

மெய்யன்பர்களே!

சற்று சிந்தியுங்கள். ஏழைகட்கு உணவு தருவது எவ்வளவு இன்றியமையாதது? அதனினும் சிறந்த பேறு உண்டோ? கைப் பொருள் உண்டானபொழுது கரவாது அறஞ் செய்மின். காக்கையைக் கண்டாவது சிறிது விழிப்படையுங்கள். "பகடு நடந்த கூழ் பல்லாரொடுண்க" என்ற அறவுரையை நினைமின்.

ஏழைகள் வயிற்றை நல்ல அன்னத்தால் நிரப்பினவன் வயிறு வானுலகில் அமுதத்தால் நிரம்பும். ஏழைகட்கு நீர் மோர் கொடுத்தவன் காமதேனுவின் தீம்பால் பருகி இன்புறுவன். தவஞ் செய்யும் ஒருவனுக்குச் சிறந்த ஆற்றலாவது பசியைப் பொறுத்தலாம். பசியைப் பொறுத்தல் மிகவும் கடுமையானது. அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியைப் பொறுப்பானுடைய ஆற்றல் பசியையாற்றுபவனுடைய ஆற்றலுக்குப்பின்நிற்கின்றது. அன்பர்கள் கவனிக்க; பசியைப் பலநாள் பொறுத்துப் பட்டினி கிடந்து தவஞ் செய்யும் தவசிரேட்டனைவிட வறியவர் பசியை யாற்றும் தருமசீலன் பெரியவனாகின்றான்.

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின் —பொதுமறை.

உம்மால் நிரம்ப அறஞ் செய்தற்கு இல்லையாயின் இலைகளைச் சமைத்தாவது கொடுங்கள். இலையாயினும் என்பதற்கு "ஒன்றும் இல்லையாயினும்" என்றும் பொருள் படும்.

"வேகாத பண்டம் பலநாள் உமக்குத் துணையாக இருக்கும். வெந்தது விரைவில் கெடும். வேகாததைத்தர மனமில்லையேல் வெந்ததையாவது கொடுங்கள்" என்னும் நயம் பாராட்டற் குரியது. "வெந்தது ஏதாயினும்" என்னும் சொல் அதனினும் சிறந்த நயம். அழகாகச் சிந்திப்பார்க்கு அவற்றின் அருமைப் பாடு விளங்கும். "கேளாமுன்னமே குறிப்பறிந்து தாமே சென்று கொடுக்கவேண்டும். அங்ஙனந்தருவது தலையானது; தருவித்துக் கொடுப்பது இடையானது; வந்து கேட்ட பின் தருவது கடையானது. கேட்டுந் தரவில்லையாயின் அவரை எந்த வகுப்பில் சேர்ப்பது என்று விளங்கவில்லை. நீவிர் கேளாமுன்னமே தர வேண்டும். அப்படித் தரவில்லையேல் கேட்டபிறகாவது கொடும்" என்னும் குறிப்பு எத்துணைச் சுருக்கமாக "ஏற்றவர்க்கே" என்று உன்னுங்தோறும் உள்ளத்தை உருக்கு மாறு சுவாமிகள் அமைத்[illegible]ர்கள் என்பதை சிந்திப்பாருங்கள்.

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

## "சென்னிமலைச் சிறப்பு"

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இருவரும் வளரும் நாளில், தாயரும் சேடியரும் கூடி அரங்கேற்றுதற்கு எண்ணி, இருவரையும் அலங்கரித்து சிவாலயஞ் செல்லுவாராகி வீதியில் அழைத்துக்கொடுபோனார். பலாப்பழத்தைக் கண்டு ஈ மொய்ப்பதுபோல இளங்குமரர்கள் மோகாந்தகாரமுற்றுப் பின்தொடர்ந்தனர். அவர்கள் புன்முறுவலைக் கண்டு மயங்கினர் சிலர்; மலைபோன்ற தனங்களைப் பார்த்து பேதுற்றனர் சிலர்; எங்களை யடிமைகொண்டு அருள்வீர் என்பர் சிலர்; உயிர் இல்லாதவர்போல் அசைவற்று நின்றனர் சிலர்; இமைத்தலை மறந்து ஓவியம்போ லிருந்தனர் சிலர்; கைகூப்பி வணங்கி எம்மை சற்றுப் பார்த்து ஒருபேச்சாவது பேசுவீர் என்பர் சிலர்.

இங்ஙனம் ஆடவர் மயக்குற்று வருந்திப் பின்வர, தொண்டீசர் திருக்கனிக்குப் போய், மலரிட்டு மும்முறை வணங்கினர்கள். செல்வரும் அறிஞரும் இளங் குமரரும் எள்ளிட இடமின்றி நெருங்கி யிருக்கும் மணிமண்டபத்தில் நடனமிடத் தொடங்கினர். இசைக்கருவிகள் இனிது ஒலித்தன. காலில் தண்டையும் சிலம்பும் "கலீர் கலீர்" என்று ஒலிக்க பரதநூல் முறைப்படி கைவழியே கண் செல்ல, கண்வழியே கருத்து செல்ல மிக அழகாக நடித்தனர். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் அந்நடனத்தைக் கண்டு அறிவிழந்து மதுவுண்ட வண்டுகளைப்போல் மயங்கி "ஆகா! இந்த மண்டபம் இந் நடனத்திற்குக் காணாது, இந்திரனுடைய ஆயிரக்கால் மண்டபமும் இத்துடன

---

### கருத்துரை.

நம்மவர்களே! முருகனை வணங்கி ஏற்றவர்க்கு இயன்றதைக் கொடுங்கள். அன்னதானம் உம்மால் கொடுக்கப்பட்டது உமக்கு மரண யாத்திரைக்குக் கட்டமுதும் உற்ற துணையுமாகும்.

கலந்திருந்தால் சிறப்பாக இருக்கும்" என்றனர்கள். அவ்வுரையைக் கேட்ட சிறுநல்லார் பெருநல்லார் என்ற இருவருக்கும் முன்னைப் பிறப்பின் உணர்வு வந்தது. தாங்கள் தேவ மாதர் என்பதும் இந்திரன் கட்டளையும் எண்ணி, நிருத்தத்தின் முடிவில், சிவபெருமானைப் போற்றி "தேவ தேவ! தென்னாடுடைய சிவனே! எந்நாட்டவர்க்கும் இறைவா! மலைமகள் கொழுந! கைலைமலைக் கடவுளே! நாங்கள் எண்ணிய கருமம் விரைவில் முற்றுப்பெற வேண்டும்" என்று வேண்டி வழிபட்டு ஒருவரையுங் கண்ணெடுத்துக் காணுமல் தம் மனை புக்கனர்.

இந்திரன்மீது காதலாய் கண் துயிலாது கலங்கினர். பொன்னுலகாளும் புரந்தரன் அவர்கள் கருத்துக்கு இணங்கி நாள்தோறும் இரவில் வந்து அவர்களைக் கலந்து மகிழ்வித்துச் செல்வன். இந்திரனுடன் அவர்கள் இன்ப வாரிதியில் ஆழ்ந்து சுகித்தனர். இதனை யறியாத தனவந்தர்கள் அளவற்ற நிதிகளைக் கொணர்ந்து கொடுத்து தமது விருப்பத்தை யுரைத்து வேண்டி நின்றனர். அம்மங்கையர் அதனைக்கண்டு வெறுத்து ஒதுக்கிவிட்டனர். அதனால் அவ்வாடவர்கள் மிக்க வருந்திய மனமும் சினமுங் கொண்டனர். அக்கால் உலகை அரசு புரியும் பேரரசனுகிய பொருநன்கிள்ளி வளவனிடம் போய், நல்லார்களுடைய அழகுநலத்தை யுரைத்து மயலூட்டினர். அது கேட்ட மன்னன் நல்லாரை யழையும் என்று தூதர்களைப் போக்கினன். தூதர்போய், நல்லாரைக்கண்டு "மாதர் மணிகளே! நும்மை மன்னர்பெருமான் அழைக்கின்றனர், வம்மின்" என்றனர். நல்லார் அதுகேட்டு "அரசன் எம்மை யழைக்குங் காரணம் யாதொன்று மில்லை. வாளா அழைத்தல் முறையன்று. ஆதலால் வர உடன்பாடில்லை" என்று மறுத்துவிட்டனர். அரசன் அஃதுணர்ந்து மனம் வாடி நின்றனன்.

பின்னொருநாள் அரசன் சிவாலயம் புகுந்து எந்தை எண்டோளீசற்கு அலங்காரம் புரிவித்துக்கொண்டிருந்தான். அதுசமயம் நல்லார் அங்குவந்து சிவபெருமான் திருமுன் வீணைகானஞ் செய்து கல்லுமுருகக் கனிந்து கண்ணீர் மல்கிக் காதலாகிப் பாடினர். பாடித் திரும்பிச் செல்லுங்கால் சிலர் அரசனுக்கு அவரை அறிவித்தனர். அரசன் அவரை நோக்கி "பெண்மணிகாள்! நீவிர் யாவர்?" என்றான். நல்லார் "யாம் கணிகையர்" என்றனர். அரசன் "அங்ஙனமாயின் நிரம்பப் பொருள் தரினும் இணங்காதிருத்தல் யாதோ?" என்றான். நல்லார் "மன்ன! யாம் மண்ணுலகரை மருவுதல் செய்யோம்" என்றனர். மன்னன் "அழகிய நங்கைமீர்! புணர்ச்சிக்குறிகள் உம்மிடங் காணப்படுகின்றதே?" என்றான். நல்லார் "வேந்தே! மானிடரைப் புணரோம். புருகூதன் வந்து எம்மைப் புணர்கின்றான். இதில் ஐயமில்லை" என்றனர். மன்னன் "மாதரீர்! அங்ஙனமாயின் நுமது காதலன் தேவர்கோமானைக் கொண்டு பூமாரியும் பொன்மாரியும் பொழிவிப்பீர்" என்றான். நல்லார் "காவல! அங்ஙனமே யாகுக" என்று கூறிச் சென்றனர். அன்றிரவு அமரர்கோமான் வந்து அவர்களை மருவுங்கால், மன்னனுக்கும் தமக்கும் நிகழ்ந்தவற்றைக் கூறி பூமாரி பொன்மாரி பொழிவிக்க வேண்டினர். உடனே இந்திரன் அவ்விடத்திற்கு அணித்தாக உள்ள சென்னிமலை மீது "சல சல" என்று பொன் பூ மாரி பொழிவித்தான். அதுகண்டு யாவரும் இறும்பூ துற்றனர். பின்னர் நல்லார் சென்னிமலை யாண்டவரை வழிபட்டு பதம் புக்கனர். அக்காரணத்தால் அந்நாடு பூந்துறைநாடு என்றும், அம் மலை புஷ்பகிரி என்றும் சென்னிமலையை யடுத்த ஊர் பூந்துறையூர் என்றும், அங்குள்ள சிவமூர்த்தி திருமுகமலர்ந்த தான்தோன்றீசர் என்றும் பேர்கள் உண்டாயின.

சென்னிமலைக்கு மற்றொரு பேர் புட்பகிரி.

(தொடரும்)

உ

முருகா

# கற்பு.

## ஞானம்பிகை

வேலைக்காரி :— ஐயா! அம்மாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. தங்கச்சிலை மாதிரி மிக்க அழகாக இருக்கின்றது.

தருமலிங்கர் :— முருகா! எனது நெடுநாளைய கலி நீங்கிற்று. கலியுகவரதா! புத்திரபாக்கியத்தைத் தந்த புனிதா. என் உள்ளங் குளிர்ந்தது.

தருமலிங்கர் தனது செல்வப்புதல்வனுக்கு ஜெயசீலன் என்று பேர் சூட்டினர். குழந்தையை மிக அருமையாக வளர்த்தனர். குணவதி தன் மகனைக் காணுந்தோறும் உள்ளம் • வப்பாள். அவளுக்கு ஜெயசீலனிடம் இருந்த அன்புக்கு அளவில்லை. தன்னைப் போல் தவஞ்செய்தவர்கள் உலகில் ஒருவருமில்லை என்று தன்னைத் தானே மெச்சிக்கொள்வாள். தன் மகனுடன் கொஞ்சி விளையாடுவதிலேயே அவளுடைய நேரம் முழுதுங்கழிந்தது; "கண்ணே. கரும்பே! பொன்னே! மணியே!" என்று அவள் வண்ண வண்ணப் பேரிட்டு அழைப்பாள்.

ஜெயசீலன் பிறந்த ஓராண்டுக்குள் தருமலிங்கர் சிவபதமெய்தினர். குணவதி மிகுந்த துன்பக்கடலுள் மூழ்கி பரிதவித்தனள். இறகொடிந்த பறவைபோல் ஏங்கினள். காலனை வைது வேலனை வாழ்த்திப் பாலனைப் பாது காத்து வந்தாள். பெருமையாக வாழ்ந்த குடும்பம். திடீரென்று இப்படி அவளுடைய வாழ்வெனும் மாளிகை தகர்ந்து வீழ்ந்துவிட்டது. பாத்திரங்களை விற்றும், பொன்னுபரணங்களை விற்றும் ஒருவாறு குடும்பத்தை நடாத்தி வந்தனள். இப்படியும் அப்படியுமாக 20 வருடங்கள் கடந்தன. ஜெயசீலன் யாதொரு குறைவுமின்றி வளர்ந்து படித்து பெரியவனுனன்.

ஜெயசீலன் கீழே நடந்தால் குணவதிக்கு தன் உடம்பு வலிக்கும். அவன் காலில் முள் தைத்தால் தன் கண்ணில் தைத்தது

போலிருக்கும். தன் மகனைக் காணுந்தோறும் அவள் உடம்பு பூரிக்கும். பால் குளத்தில் அவனைக் குளிக்கவைத்து, பாயச மடுவில் நீந்த விட்டு, நெய்க் கிணற்றில் முழுகவைத்து, இட்டிலி மலையில் உருளவைத்து. பட்சணக் குவியலில் உலாவ விட்டு அருமையினும் அருமையாக வளர்த்தாள்.

ஜெயசீலன் ஒரு நல்ல உத்யோகத்தில் அமர்ந்தான். அவனுடைய நடையழகையும், உடையழகையும் கண்டு அரசகுமாரன் என்றே குணவதி நினைப்பாள். அடுத்த ஊரிலிருந்த ஒரு சீமானுடைய மகள் ஞானம்பிகை என்ற கன்னிகையைப் பேசி மகனுக்கு கலியாணம் செய்தாள். மகன் மாப்பிள்ளையாக மணவறையில் இருக்கும்போது குணவதி அவனைத் தேவேந்திரனென்றே தீர்மானித்தனள். ஆனால் குணவதி ஜெயசீலனை எவ்வளவுக்கெவ்வளவு அன்பு பாராட்டி வந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தாயை வெறுத்து வந்தான். அவள் நூறு முறை அழைத்தாலும் இவன் ஒரு முறை "என்" என்று கேட்கமாட்டான். அவன் ஒரு முறை பேசிவிட்டால் குணவதிக்கு உச்சி குளிர்ந்துவிடும். "அம்மா" என்று அவன் ஒருமுறை அழைக்க மாட்டானா என்று அவள் மிக்க ஆவலுடன் எதிர்பார்ப்பாள். ஆனால் அவள் காது அதற்கு எதிர்மாறாக "தடிமுண்டை" "கிழக் குரங்கு" என்ற வசவு மொழிகளையே கேட்டது. எனினும் தன் மகன் வைவதை யெல்லாம் அவள் வாழ்த்தியதாகவே எண்ணுவாள். குணவதி, "கண்ணு" என்று அன்பு கனிய அழைப்பாள். ஆனால், அவன் "சீ! சைதானே" என்பான். அப்படி எரிந்து வீழ்ந்தும் குணவதி சிறிதும் வருந்தாமல் அவன் வாயைத்தொட்டு முத்தமிடுவள். ஜெயசீலன் அவள் முதுகில் ஓங்கி ஒரு குத்து வைப்பான். அது அவளுக்கு ஐஸ் வைத்தது போல் குளிர்ந்திருக்கும். பிள்ளைமேல் வைத்த பாசம்; பாவம்!

ஜெயசீலன் தன் அருமைத் தாயாரை அறவே வெறுத்து வந்தான். அவளைக்கண்டால் அவனுக்கு ஒரே கசப்பு. ஆனால் அவன் மனைவி ஞானம்பிகை அதற்கு நேர் மாறுபாடு. மாமியை தாயினும் அன்பாக வணங்குவாள். மாமியைக் கேளாமல் ஒரு சிறு காரியமும் செய்யமாட்டாள். மாமியை தன் உயிரினும் பெரிதாக எண்ணிப் பேணிவந்தாள். மாமி உணவு கொண்டபின் தான் உணவு கொள்வாள். பெண்களுக்குத் தெய்வம் கொழுநன். கொழுநனுக்குத் தெய்வம் தாய். ஆதலால் தனது தெய்வத்திற்கு

தெய்வம் மாமி என்று எண்ணி மாமிக்குப் பணிவிடை செய்வாள். தனக்கு எல்லாவித இன்பத்தையும் தரும் அருமைக் கணவனைப் பெற்று வளர்த்துக்கொடுத்த மாமியை அவள் பெரிதும் மதித்து அன்பு முழுதும் செலுத்தினாள்.

ஒருநாள் ஜெயசீலன் வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தான். வந்தவன் நிமிர்ந்து வந்தான். வாசற்படியில் தலை படார் என்று முட்டிக்கொண்டான். அதுகண்ட குணவதி "ஐயோ" என்றலறி ஓடிவந்து மகனுடைய தலையைப்பிடித்து ஆறுதல் செய்தாள். ஜெயசீலனுக்கு வந்துவிட்டது சீற்றம் தாயை காலால் உதைத்துத்தள்ளினான். "தடிக்குரங்கே! நீ எதிரே வராது ஒழிந்துபோ. தரித்திரமே! உனக்கு ஏன் இன்னும் ஓலை வரவில்லை". என்று வாய்க்கு வந்தபடி வைதான். குணவதி அத்தனை வசவுகளையும் பொறுத்துக்கொண்டு மருமகளை யழைத்து, தீர்த்தங் கொடுக்கச் சொன்னாள். ஞானம்பிகை தன் மாமியைக் கணவன் உதைத்து வைவதைக்கண்டு கண்ணீர் வடித்தாள். கணவன் கால்மேல் வீழ்ந்து சொல்லுவாள்:

"பிராணேசா! அம்மாவை இப்படி உதைக்கலாமா? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று படித்திருக்கின்றீரே. "ஈன்றாளின் என்ன கடவுளுமில்" என்ற நீதிமொழியைக் கேட்டதில்லையா. மூன்னூறு நாள் சுமந்து, மூந்தித்தவங்கிடந்து, அந்திப் பகலாய் சிவனை ஆதரித்துத் தொந்தி சரியச் சுமந்து பெற்ற தாயல்லவா? சிறுபோதே நீங்கள் தந்தையை இழந்து விட்டீராமே. கண்மணிபோல் சீராட்டிப் பாராட்டி நீராட்டிய அருமை யன்னையை வையலாமா? வேண்டாம். வேண்டாம். 'மாதா வயிறெரிய வாழா ஒருக்காலும்' என்ற நன்மொழி உமக்குத் தெரியாதா? எவளுடைய பாலைக்குடித்து வலிமை பெற்றீரோ அவ்வலிமையை அவளிடத்திலேயா காட்டுவது? தாய் கடவுளினும் சிறந்தவள். அன்பின் வடிவே! இனி இப்படி செய்யாதீர்! என்று கல்லுங் கரையுமாறு கூறி வேண்டினாள். அவள் கூறிய அறவுரை ஜெயசீலனுடைய செவியில் ஆன்றோர் உள்ளத்தில் தீய எண்ணங்கள் நுழையாததுபோல் நுழையாதொழிந்தன.

குணவதிக்கு மகன் தன்னை உதைத்தும் அவன்மீதுள்ள அன்பு அணுவளவுங் குறையவில்லை. மகனைக் காணக் கண்களும், பேச நாவும் துடித்துக்கொண்டிருந்தன. தாய் தன் மீது வைத்துள்ள

கரை கடந்த அன்பு வெள்ளத்தில் ஒரு திவலையும் ஜெயசீலன் தன்மேற்படாவண்ணம் ஒதுங்கினான். டம்பமாக அலங்கரித்துக் கொண்டு போவதும் வருவதுமாக இருப்பான். தாய் ஜன்னலில் நின்று தனது மகனுடைய கோலத்தைக்கண்டு கண் குளிர்வாள்.

ஒரு சமயம் ஜெயசீலனுக்கு உடல் நலங்குன்றி படுத்திருந்தான். குணவதி அருகில் வந்து உட்கார்ந்து "அப்பா மகனே! உனக்கு என்னமாதிரியிருக்கின்றது. ஏன் அயர்ந்து படுத்திருக்கின்றாய். கண் திறந்துபார்; உடம்பு வலிக்கின்றதா? என்று பரிந்து கேட்டாள். ஜெயசீலன் கண் திறந்து பார்த்தான். தாய் அருகே இருக்கக்கண்டான். உடனே அவனுக்கு எங்குமில்லாத சீற்றம் மூண்டுவிட்டது. உடம்பில் இருந்த நோய் எங்கோ பறந்தொழிந்தது. "சீ தடிமாடே! எனக்கென்ன உடம்புக்கு? எதிரே நீ இருக்காதே; ஒழிந்துபோ! பூமியில் நீ இன்னும் எதற்காக இருக்கின்றாய்? மூதேவி! என்று சரமாரியாக வைது, தாயார் முகத்தில் காரியுமிழ்ந்து உதைத்துத்தள்ளினான். ஞானாம்பிகை ஓடிவந்து வேண்டாம்; வேண்டாம்; அம்மாவை துன்புறுத்தாதீர். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பது முதுமொழியல்லவா? என்று தடுத்தாள். குணவதி எழுந்து தனியிடம் போய் கண்ணீர் சிந்தினாள்.

ஞானாம்பிகை தன் மாமியிடம் வந்து கும்பிட்டு, "அத்தை நீங்கள் வருந்தவேண்டா. உங்கள் மனங்கலங்கினால் நன்மையுண்டாகாது. மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றாள். குணவதி "அம்மா! என் குலவிளக்கே! உன்னை மருமகளாகப்பெற்ற என் பாக்கியமே பாக்கியம், என் செல்வமே! எனக்கு என்றும் வருத்தமில்லை. அவன் உதைத்தால் உதைக்கட்டும். அவன் குழந்தையாக இருக்கும்போது எத்தனையோ விசை உமிழ்ந்தான்; உதைத்தான். அந்தக்கால்தான் இப்போதும் உதைத்தது. அவன் என்னசெய்தாலும் என் மனம் அவன்மீது அன்பு செய்கின்றது. என் வினையை நோவதைத்தவிர வேறு யாரை நோவது. நீ என்னைப்பற்றி மனங்கலங்காதே" என்று ஆறுதல் கூறினாள்.

சில நாள்களுக்குப்பின் ஜெயசீலன் தன் மனைவியுடன் பழநிக்குப் புறப்பட்டான். ஞானாம்பிகை கணவனிடம் தன் மாமியையும் அழைத்துக்கொண்டுபோக வேண்டுமென்று மன்றாடினாள் ஜெயசீலன்! "அசடு; அவளுக்கென்ன கேடு. வீட்டிலேயே முடங்கிக்கிடக்கட்டும்." என்று மறுத்துவிட்டான். இருவரும் பழநி போய் சேர்ந்தார்கள். ஷண்முக நதியில் நீராடி மலைவலம் வந்து, படியேறுவாராயினார்கள். படிகளில், கால்கள் இல்லாதவர்களையும், கண்கள் இல்லாதவர்களையும், வாய்ப்புற்று

மூடி பேசமுடியாதவர்களையும், பலப்பல நோய்களால் வருந்து கின்றவர்களையும், பார்க்க அருவருக்கத்தக்கவிதமாய் கையேந்தி, "ஐயா புண்ணியவான்களே! ஒரு தருமஞ்செய்துவிட்டுப்போங் கள்" என்று வாய் ஓயாமல், சுடுகின்ற கல்லின்மேல் இருந்து தலை மண்டை உடையக் கத்திக்கொண்டு வெய்யிலில் இருந்து பிச்சை யெடுக்குங் காட்சி ஜெயசீலன் உள்ளத்தை உருக்கியது. அவன் கண்களில் நீர் துளித்தது. மலையேறி தண்டாயுதபாணியை சேவித்தான். "சுவாமி எம்பெருமானே! படிகளில் உள்ளவர்கள் என்னபாவஞ்செய்தவர்களோ? அவர்கள் மனிதர்களாகப் பிறந் தும் இப்படி துன்பத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் சுகமாக இருக்கின்றேனே? அந்தோ! அவர்கள் கடுவெய்ய லில் கல்லின்மேலிருந்து ஒரு சல்லிக்குப் படாத பாடுபடுகின்ற னரே. தெய்வமே! கலியுகவரதா! உனக்கு அவர்கள் மீது கருணை யில்லையா?" என்று முறையிட்டு அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்து பிரசாதம் பெற்று கீழ் இறங்கி ஒரு சத்திரத்தில் தங்கினான்.

இரவு ஜெயசீலனுக்கு நெடுநேரம் தூக்கம் வரவில்லை. பிச்சை எடுக்கும் கோரக்காட்சியே அவன் மனக்கண் முன் வந்து நின்றது. படுத்து உருண்டு உருண்டு பார்த்தான். நித்திரை வரவில்லை. மெல்ல எழுந்து மலை வலம் வரலாமென்று பகுதி தூரம் போனான். அங்கு ஒரு பெரிய மகான் சிறந்த ஒளியுடன் இருக்கக்கண்டான். அவருடைய திருவடிமேல் வீழ்ந்தான். அவருடைய முகத்தில் தவப்பிரகாசம் திகழ்வதைப்பார்த்து உள்ளம் உவந்தான். "சுவாமி! குருநாதா! என்னை ஆட்கொள்ள வேண்டும். ஒரு சந்தேகம். காலை மலை மீது ஏறும்போது, கையில்லாதவர்கள், காலில்லாதவர்கள், கண்ணில்லாதவர்கள் கடு வெய்யலில் வேர்வை ஒழுகக் கையேந்திப் பிச்சை எடுக்கக் கண்டேன். அவர்கள் என்ன பாவஞ் செய்தார்கள்? அதை எனக்கு விளக்கியருள வேண்டும்" என்றான். சாது கூறுவார்; "அப்பனே! அதுபற்றி உனக்குக் கூறுவேன். கவனமாகக் கேள். காலுங்கையுமின்றி பனந்துண்டு போல் ஒருவன் படியில் இருந்தானே அவன் முற்பிறப்பில் பெற்ற தாயாரைக் காலால் உதைத்து கையால் அடித்தவன்; கண்ணில்லாமல் இருந்தவன் தாயைக் காண்பதற்கும் மனமின்றி அவளை வெகுண்டு பார்த்த வன்; வாய்ப்புற்றுடன் புழு நெளிய இருந்தவன் காலைக் காரி யுமிழ்ந்து வைத பாவி. ஊமையாக இருந்தவன் இறைவன் திருநாமத்தைச் சொல்ல வெட்கப்பட்ட மூடன். குஷ்ட வியாதி யால் பீடிக்கப்பட்டிருந்தவன் ஆன்றோர்கள் உள்ளங்கொதிக்க

அபாண்டமான பழி மொழிகளைக் கூறியவன்" என்று கூறி, பார்த்துக்கொண்டிருக்கும்போதே திரு உரு மறைந்தனர்.

ஜெயசீலன் இறும்பூதுற்றான். தான் தன் தாய்க்கு செய்த கொடுமையை நினைந்து கண்ணீர் விட்டான். தன் மனைவி கூறிய உபதேச மொழிகள் யாவும் அவன் மனதில் அப்போது நினைவுக்கு வந்தன. "அந்தோ! நமது மனைவி ஞானாம்பிகை கூறியது யாவும் உண்மை" இளமை முதற்காலே ஈன்று வளர்த்த என் தாயை வைது அடித்து வெறுத்தேனே. என்னினும் கொடியவர் யார்? தாயை நிந்திக்கும் பாவிகள் மறுபிறப்பில் இப்படி பொறுக்க முடியாத வேதனையையடைவார்கள் என்பதை இன்று உணர்ந்தேன். ஞான தண்டாயுதபாணி! என் பாவத்தை மன்னித்தருளும். இனி என் தாயினும் எனக்கு வேறு தெய்வமில்லை. அன்பே வடிவாகவுள்ள அன்னையை வெறுத்த எனக்கு நற்கதி கிடைக்குமா? ஆயிரம் மனைவியையும், ஆயிரம் மாமன் மாமியாரையும் பெறலாம் ஒரு தாயைப் பெறமுடியாதே. கோடி வருடம் தாய்க்குப் பாத பூஜை செய்தாலும் அவள் ஒருநாள் வளர்த்ததற்கு இணையாகாதே. மல ஜலத்தில் உருண்டு கிடந்த என்னை, சிறிதும் வெறுக்காமல் எடுத்துக் கழுவி, பாலூட்டிப் பாராட்டிய தாயைப் போற்றுவதை விட வேறு தவமில்லை. இல்லை இல்லை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்: மலை வலம் வந்தான். தான் தங்கிய சத்திரம் வந்து, தன் மனைவியை எழுப்பி நிகழ்ந்தன கூறி கண்ணீர் மல்கினான். மறுநாள் காலை கிரிமீது போய் தன்னை நல்வழிப்படுத்திய ஞானபண்டிதனைப் போற்றினான். தன் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று வேண்டினான். மனைவியுடன் வீட்டிற்கு வந்தான். ஓடி தாய் கால்மேல் வீழ்ந்து அவள் பாதத்தைக் கண்ணீரால் அலம்பினான். என் அருமைத் தாயே! நான் அறியாமல் செய்த அபராதங்கள் அனைத்தையும் பொறுத்தருளும். அம்மா! இனி உமது திருவடியே எனக்குத் துணை" என்று தழுதழுத்த குரலுடன் அழுது முறையிட்டான். தன் மகனை இப்படி அடியுடன் மாற்றி தன்னைப்பணியுமாறு செய்தது பழநி மலையில் வாழும் ஞானபண்டிதனா, தன் மருகி ஞானாம்பிகையா என்று விளங்கவில்லை. அவள் உள்ளங் குளிர்ந்தது; மகனை எடுத்து அணைத்து அன்புக்கண்ணீரால் அவனை நனைத்தாள். ஞானாம்பிகைக்கு அளவற்ற மகிழ்ச்சி; தன் மாமி [illegible]வனையும் அன்புடன் வழிபட்டு உள்ளம் [illegible] வாழ்ந்தார்கள்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.**

**பட்டு-சேலை தினுசுகள்**

**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**

**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




ஸோல் ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

தந்தி விலாசம் "செமந்தகா" திருச்சி.



ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இதுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா [illegible]"

உருவிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது

ஒரு முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.

1-க்கு 0—8—0. 1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்யா செட்டியார் சன்ஸ்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.


Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAI AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.